# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலைப்பீடம்

மூன்றாம் வருட கலைமாணிப்பரீட்சை – 2017/2018

வங்கியியல் மற்றும் நிதி கற்கை பிரிவு

(இரண்டாம் பருவ முடிவு)

## ECN 3267– மத்திய வங்கியியலும் நிதி ஒழுங்குமுறையும்

**நேரம்: 2 மணித்தியாலம்**

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

உமது விடைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுக.

---

1)

I. நிதி இடையீட்டாளர்கள் வணிக பரிமாற்றல் செலவை (Transaction Cost) பாதிக்கும் விதத்தை எவ்வாறு விளக்குவீர்? சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

II. வங்கிகள் முகங்கொடுக்கும் இடரபாயங்களின் வகைகள் எவை? இது ஏனைய நிறுவனங்கள் முகங்கொடுக்கும் இடரபாயங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(10 புள்ளிகள்)

2)

I. வங்கியியல் நிறுவனங்கள் பாரம்பரிய வங்கியியல் நடவடிக்கையிலிருந்து பல்வேறு வகையான வணிக நடவடிக்கைகளுக்கு மாற்றமடைந்துள்ளன. இவ்விதத்தை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. "வங்கியியல் நிறுவனங்களில் தொழிநுட்பமும் நிதியியல் கருவிகளும் நிதி இடையீட்டாளர்களின் முக்கியத்துவத்தை குறைத்துள்ளன." இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

3)

I. ஒரு குறிப்பிட்ட பொருளாதாரத்தில் நிதி முறை பரிணாமத்தின் மூன்று வளர்ச்சி கட்டங்களையும் (Three Phases of Financial System) விளக்குக.

(10 புள்ளிகள்)

II. வங்கியியல் நிறுவனங்கள் பரிணாம வளர்ச்சியின் விளைவாக ஐந்தொகையற்ற வங்கியியல் நடவடிக்கைகளை (Off Balance Sheet Activities) நோக்கி நகரும் என்று கருதுகின்றீரா?

(10 புள்ளிகள்)

[redacted]

4)

I. மத்திய வங்கியின் முக்கியத்துவத்மைதயும் அதன் பிரதான வகிபாகத்தினையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. மத்திய வங்கி ஒரு சுயாதீன நிறுவனமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றீரா? சுயாதீன மத்திய வங்கி நாணய திட்டமிடல் தொழிற்பாட்டை (Monetary Planning Function) எளிதாக்கும் என்று நினைக்கின்றீரா? சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

5)

I. பாதுகாப்பான வங்கியியல் கைத்தொழிலுக்கு வங்கியியல் ஒழுங்குமுறைகள் (Banking Regulation) தேவையானது என ஏன் கருதுகின்றீர்? உமது விடையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

II. பெசல் - I (BASEL - I) ஒப்பந்தமானது மூலதனத்தை பல்வேறு அடுக்குகளாக எவ்வாறு வகைப்படுத்துகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

6)

I. சொத்து பத்திரமயமாக்கல் செயல்முறையை (Process of Asset Securitization) சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

II. சொத்துசார் பத்திரம் (Asset- backed Security) மற்றும் பிற பத்திரங்களுக்கிடையிலான (Other Securities) முக்கிய வேறுபாடு என்ன? சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

7)

I. வங்கிசார்பற்ற நிதி நிறுவனங்களின் (Non - Bank Financial Institutes) வளர்ச்சி வர்த்தக வங்கிகளின் வணிக நடவடிக்கைகள் மாற்றமடைய காரணமாகின என நினைக்கின்றீரா? உமது விடையினை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

II. சொத்துக்களால் ஆதரவளிக்கப்படும் பத்திரங்களின் (Asset – Backed Securities – ABS) உருவாக்கம் 2007ம் ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடிக்கு வழிவகுத்த விதத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

*********